**O.S.No. 93/2018**

**DWl : சுந்தரமூர்த்தி** தேதி 5.3.2026

பிவாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

என் தந்தை பெயர் விஸ்வநாதன். என் தந்தையும் 1, 2 ,3 வாதிகளும் ஒரு சரஸ்வதி என்பவரும் முத்துகவுண்டரின் வாரிசுகள் என்றால் சரிதான். சரஸ்வதிக்கு ஒரே ஆண் வாரிசு அவர் 4 ம் வாதி வரதராஜ். ஜோதி காயத்ரி 5 ம் வாதி என்னுடன் பிறந்த சகோதரி. 2 ம் பிரதிவாதி பிரேமா என்னுடன் பிறந்த மற்றொரு சகோதரி. தாவா சொத்துகள் அனைத்தும் பூர்வீக சொத்துகள் என்றால் சரியல்ல பூர்வீக சொத்துகள் மற்றும் என் தாத்தா கிரையம் பெற்ற சொத்துகள் என்று சொல்கிறேன். என் தாத்தா முத்துகவுண்டரும் அவர் மனைவி பொங்கியம்மாளும் இறந்து விட்டார்கள். என் தந்தையும் என் தாயார் நாவாத்தாளும் இறந்துவிட்டார்கள். முத்துகவுண்டர் இறந்த பின்னிட்டு வாதிகளும் நானும் சேர்ந்து நாளது வரை பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தி கொள்ளவில்லை என்றால் சரிதான். என் தந்தையும் அவரது சகோதரிகளான 1 முதல் 3 வாதிகள் மற்றும் 4 ம் வாதியின் தாயார் சரஸ்வதி அவர்களும் முத்துகவுண்டர் இறந்தபின்னிட்டு சொத்தில் எந்த ஒரு பாகமும் கேட்கவில்லை என்றால் சரிதான். தாவா பிராதில் சொல்லியுள்ள இரு தரப்பினர்களுக்கிடையே உள்ள உறவு முறைகள் சரிதான். முத்துகவுண்டருக்கு வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் தவிர வேறு யாரும் வாரிசுகள் இல்லை. தாவா சொத்தில் எவ்வளவு பங்கு விகிதாசாரம் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன்.